# தமிழ் இலக்கியங்களில்

## அறமும் அருளும்

தொகுதி 2
















பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. மகாலட்சுமி

திருமதி சுகந்தி நாடார்

முனைவர் இலட்சுமி கார்மேகம்



தமிழ்த்துறை (அரசு உதவி), என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)

பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"
(மதுரைக்காஞ்சி: 489-492)

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (திருக்குறள் -76)




என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
தேசிய மீள்தர மதிப்பீட்டு "ஏ" தகுதி
ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் 9001 - 2015
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001.

₹ 400/-

பிரபாத் பிரிண்ட் 0422 2646036

# தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்

## (பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் ஆ. மகாலட்சுமி**<br>**திருமதி சுகந்தி நாடார்**<br>**முனைவர் இலட்சுமி கார்மேகம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜனவரி, 2019 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை (அரசு உதவி)**<br>**என்.ஜி.எம் கல்லூரி**<br>பொள்ளாச்சி - 642 001. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | **XVIII + 348 - 366** |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 87009- 52 - 3**


# Ethics and Devotion in Tamil Literature

## (International Conference)


| | | |
|---|---|---|
| Editors | : | **Dr. A. Mahalakshmi**<br>**Miss. Suganthi Nadar**<br>**Dr. Lakshmi Karmegam** |
| Copyrights | : | Editors |
| First Edition | : | January, 2019 |
| Published by | : | **Department of Tamil**<br>**N.G.M. College**<br>Pollachi - 642 001. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | **XVIII + 348 - 366** |
| Prize | : | **Rs. 400/-** |

91

# திருக்குறள் உணர்த்தும் இறைநெறி

**முனைவர் க. தனலட்சுமி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி.

அருள்கின்ற இறைவனும் அதன் வழி நடக்கும் அறமும் வாழ்வில் உயர்ந்தோங்க அடிப்படையாக விளங்குகின்றன. இரு சொற்களும் பெருஞானத்தை உணர்த்துவன. ஒன்று மனிதர்க்கெல்லாம் ஆதியாய் விளங்கும் ஆண்டவனின் அருள் மற்றொன்று அதன் வழி நிற்கும் அறம். இவ்விரு சிந்தனைகளும் திருக்குறளில் பாயிரவியலில் அறன் வலியுறுத்தல் அதிகாரத்திலும், துறவறவியலில் அருளுடைமை அதிகாரத்திலும் உணர்த்தப்படுகின்றன. இந்த இரு அதிகாரத்திற்கும் அடிப்படையாகிய பாயிரவியல் கூறும் இறைவணக்கத்தை முன்வைத்தே இக்கட்டுரை அமைகின்றது.

## முதன்மைப்பொருள்

பெரும்பாலான மொழிகளிலுள்ள எழுத்துக்கள் அகர ஒலியை அடிப்படையாகக் கொண்டே செயல்படுகின்றன. மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் என்று எதுவும் அறியாத வள்ளுவர் பிற்காலத்தில் தோன்றிய மொழிகளின் எழுத்துக்களின் ஆதி வடிவம் அகரம் என்று கூறியிருப்பது அவரின் பேராற்றலை விவரிக்கின்றது. தமிழிலிருந்து தோன்றிய கிளை மொழிகள் மட்டுமில்லாது ஆங்கில மொழியின் முதல் எழுத்தாகிய "யு" வும், "**அ**" ஒலியாக உச்சரிப்பது குறிப்பிடத்தக்கது. "**அ**" கர ஒலி போல, இந்த உலகம் இறைவனையே அடிப்படையாகக் கொண்டது. அந்த இறைவனைக் குறிப்பிடும் பொழுது "**பகவன்**" என்று குறிப்பிட்டு அவனே ஆதியானவன் என்று உலக முதன்மைப் பொருளாகப் பதிவு செய்வது குறிப்பிடத்தக்கது.

## பேரறறிவு வடிவானவன்

கேள்வியை மனதில் வைத்துக்கொண்டு பதில் எழுதுவதைக் காட்டிலும் பதிலை மனதில் வைத்துக்கொண்டு கேள்வி எழுப்புவது விழிப்புணர்வுச் சிந்தனையை ஏற்படுத்தும். ஆனால், கேள்வியையும் பதிலையும் ஒரு சேரத்தரவல்ல சிந்தனை,

> ***"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்***
> ***நற்றாள் தொழாஅர் எனின்" (2)***

என்ற குறளில் உள்ளது. தூய பேரறிவு வடிவான இறைவனின் நல்ல திருவடியைத் தொழாவிட்டால் பல கற்றும் பயன் என்ன? என்று கேள்வியை எழுப்பி எந்த விதமான பயனும் இல்லை என்ற பதிலைக் கூறுவது பெருஞ்சிந்தனைக்குரியது. இறைவனை "**வாலறிவன்**" என்று **தூய பேரறிவு** வடிவானவன் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இங்கு **அறிவு என்பது** மெய்ஞ்ஞான அறிவு என்று கூறுவதே பொருத்தமானதாக **அமையும்.**

**மலர்மிசை ஏகினான்**

மலரிலும் வீற்றிருக்கும் பெருமை மிக்க திருவடியை அடைந்தவர்கள் மண்மீது நெடிது வாழ்வார்கள் (3) என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இக்குறளுக்கு உரை எழுதிய கவிஞர் சிற்பி அவர்கள்,

*"மனம் என்னும் மலர் தேடி வருபவன்"* (ப-2)

என்று உரை எழுதுகிறார். ஒவ்வொருவர் மனமே இறைவன் குடிகொள்ளும் இடம் என்பதும், அவன் மலரிலும் வீற்றிருப்பான் என்பதும் குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியத்தில் பரிபாடலில் திருமாலும், செவ்வேளும் குறிப்பிடப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை, முருகனை மட்டும் விரிவாகப் பேசுகின்றது. சிவன், கொற்றவை பற்றிய பதிவுகள் சங்க இலக்கியத்தில் இருக்கின்றன. இருப்பினும், இவற்றையெல்லாம் விடுத்து இறைவனின் பெயரைக் குறிப்பிடாது எழுதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனால் தான் கவிஞர் சிற்பி அவர்கள்.

*"செந்தமிழ் நாட்டின் மொழியில் எழுந்தும்*
*மன்னவர் பெயர் இல்லை*
*தெய்வ வணக்கம் சொல்லியும் கடவுள்*
*திருப்பேர் தர வில்லை*
*மந்திரம் சடங்கு சமயங்கள் இல்லை*
*காரணம் ஏதென் றால்*
*மனித குலத்தின் மனச்சான் றாக*
*மலர்ந்தது வள்ளுவர் நூல்"*
*(திருக்குறள்.சிற்பி.உரை.)*

என்று மனித குலத்தின் மனச்சான்றாகக் குறிப்பிடுகிறார்.

**விருப்பு வெறுப்பு அற்றவன்**

மதங்களின் பெயர்களாலும் இறைவனின் பெயர்களாலும் இன்று விருப்பு வெறுப்புகள் அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. ஆனால், இவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்டவன் இறைவன் என்பதை,

*"வேண்டுதல் வேண்டாமை இலான்"* (4)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட இறைவனின் திருப்பாதத்தைச் சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் துன்பம் இல்லை என்றும் குறிப்பிடுகிறார். எப்பொழுதும் இன்பமே என்று கூறாது எப்பொழுதும் துன்பம் இல்லை என்பதால் இறைவன் துன்பத்தைப் போக்கும் மாமருந்தாகச் செயல்படுகிறான் என்பதை அறியலாம். மேலும்,

*"வள்ளுவர் செய் திருக்குறளை*
*மறுவற நன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மனு ஆதி*
*ஒரு குலத்துக்கு ஒரு நீதி'*

என்று மனோன்மணியம் சுந்தரனார் கூறுவது இங்கு எண்ணத்தக்கது.



**இருவினைகள் தீர்ப்பவன்**

*"தீதும் நன்றும் பிறர் தர வாரா"*

என்று குறிப்பிட்டு மக்களைச் சிந்திக்கச் செய்த மரபில்,

*"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"* (5)

என்று வள்ளுவர் பதிவு செய்தார். இறைவனின் பொருளை உணர்ந்து மெய்யான புகழை உடையவர் இறைவர் என்பதை உணர்ந்தால் நன்மை தீமைகள் வந்து சேராது அதனைக்காட்டிலும் மேல்நிலையை அடைவர் என்ற கருத்து சிந்திக்கத்தக்கது. இறைவனின் மெய்யான புகழ் குறித்து வள்ளுவர் குறிப்பிட்டதால் தான் பாரதியார்,

*"வள்ளுவன் தன்னை*
*உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட*
*தமிழ்நாடு"*

என்றும், பாரதிதாசன்,

*"வள்ளுவனைப் பெற்றதால்*
*பெற்றதே புகழ் வையகமே"*

என்றும் பாடினர்.

**ஐம்புலன் ஆசைகளை நீக்கியவன்**

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்கள் வழியே எழும் ஆசைகளை அகற்றியவனுடைய பொய்ம்மை இல்லாத ஒழுக்க நெறி நிற்போர் புகழோடு நெடிது வாழ்வர் (6) என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஒழுக்க நெறிகளைக் கற்றவர்களல்ல, அதனை ஒரு நேரம் பின்பற்றி பிறகு அதனை விட்டவர்களும் அல்ல. யார் ஒழுக்க நெறி வழி என்றும் நிற்கிறார்களோ அவர்களே என்றும் நீடு வாழ்வார் என்ற சிந்தனை என்றும் மனதில் பதிய வைக்கத்தக்கதாகும்.

**தனக்குவமை இல்லாதவன்**

உவமை கூற முடியாத பெருமை மிக்கவன் திருவடியைச் சேராமல் மனக்கவலையிலிருந்து விடுபட முடியாது என்று வள்ளுவர் இயம்புகின்றார். பேரின்ப வடிவான கடவுள் துயரத்தைப் போக்குபவராக விளங்குவது குறிப்பிடத்தக்கது. பாற்கடலில் இருந்தால் திருமால், கங்கையைச் சடாமுடியில் வைத்திருந்தார் சிவன் என்று பலவாறு உருவங்களால் குறிப்பிட்டாலும் கடவுள் உவமைக்கத்தக்கவர் அல்ல என்று மாபெரும் புரட்சியை வள்ளுவரே இயம்புகின்றார்.

**பிறவிக்கடல் நீந்த உதவும் பேராற்றல்**

அறக்கடலாய் விளங்கும் அருளாளன் திருவடியைப் பின்பற்றாமல் துயரக்கடலை நீந்த முடியாது என்றும்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (10)

என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பிறவியைப் பிறவிப் பெருங்கடல்(10) என்றும், பிறவாழி (8) என்றும் குறிப்பிட்டு அதனைக்கடக்க இறைவனே துணைபுரிவான் என்று குறிப்பிட்டுள்ளது. பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் சிந்திக்கத் தக்கது.

## எண் குணத்தான்

பெருங்குணங்களை உடையவன் அடிகளை வணங்காதவன் தலை, ஐம்பொறிகளைப் பெற்றிருந்தும் எந்த விதமான பயனும் இல்லை என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. எண்ணற்ற சிறந்த குணங்களை உடையவனாக இறைவன் குறிப்பிடப்படுகிறான். சமுதாய இருட்டைப் போக்கவல்ல ஒளிவிளக்காக திருக்குறள் விளங்குகின்றது. மதங்களாலும் இறைவனாலும் பிரித்துப்பார்க்காமல் அன்பு, அறம், ஒழுக்கம் ஆகியவற்றால் இணைத்துப் பார்க்கும் பண்பு குறளில் தான் மிகுந்து கிடக்கின்றன. அதனால் தான் என்றும் குறள் நிலைத்து நிற்கின்றது.

## குறள் காட்டும் இறைநெறி

ஒட்டு மொத்த இறைவணக்கக் குறள்களைப் பார்க்கின்ற பொழுது கீழ்க்கண்ட கருத்துக்கள் புலனாகின்றன.

1. உலகம் இறைவனையே முதன்மையாகக் கொண்டு விளங்குகின்றது.
2. கடவுளைக் குறிக்க பகவன், வாலறிவன், இறைவன் ஆகிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன.
3. மனம் என்னும் மலர் தேடி வருகின்றவனே இறைவன் ஆவார்.
4. இறைவன் திருவடி சேர்ந்தவர்களே நிலத்தில் நீடுவாழ்வர்.
5. விருப்பு வெறுப்பற்றவன் இறைவன்.
6. துயரங்களைப் போக்குபவன்.
7. இறைவனை அறிந்து கொள்வதோடு, புரிந்து கொள்பவர்களுக்கு நன்மை தீமைகள் அண்டாது.
8. ஐம்புலன் ஆசைகளை நீக்கியவன் இறைவனாவான்.
9. தனக்கு உவமை இல்லாதவனாக இறைவன் விளங்குகின்றான்.
10. இறைவனை அடைந்தால் துயரங்களைக் கடக்கலாம்.
11. சிறந்த குணங்களின் அடையாளமாக இறைவன் விளங்குகிறான்.

ஆகிய கருத்துக்கள் இன்றைய சமுதாயத்திற்கு வழிகாட்டும் இறைநெறிகளாக விளங்குகின்றன. குறள் கற்போம்! அதன் வழி நிற்போம்!.